**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 278 இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2024 ஏப்ரல் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதி கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நிநயாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் 19 செலவு விடயங்கள் நிதி ஏற்பாட்டுச் சேமிப்பினை திணைக்கள செலவுப் பேரேட்டுடன் ஒப்பிடும் போது ரூபா 12,739,097 வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் செலவுப் பேரேட்டின் பிரகாரம் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் சொத்துக்களை கொள்வனவு செய்யும் செலவுகளை நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றுடன் ஒப்பிடும் போது ரூபா 543,865 வித்தியாசம் காணப்பட்டது. | சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்படாத சொத்துக்கள் இதற்கு காரணமாகும். | நிதிக்கூற்றுக்களானது துணைப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்யக்கூயதாக இருத்தல் வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்தை உள்ளடக்கி 18 பிரதேச செயலகங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 | வித்தியாசத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதிக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க அத்திகதியில் உள்ளவாறான அந்த மீதிக்குமிடையே ரூபா 10,102,695,624 வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கணக்கின் ஆரம்ப மீதிக்கும் அத்திகதியில் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்கு இணங்க அந்த மீதிக்குமிடையே ரூபா 10,106,440,909 வித்தியாசம் காணப்பட்டது. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்யப்பட்டது. | -மேற்படி- |
| (உ) | பரீட்சை மீதியின் பிரகாரம் 2023 திசெம்பரி 31 இல் உள்ளவாறு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதி பணத்திற்கும் அத்திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க அந்த மீதிக்குமிடையே ரூபா 900,000 வித்தியாசம் காணப்பட்டது. | திறைசேரியிடம் கலந்துரையாடி சரி செய்யப்படும் | -மேற்படி- |
| (ஊ) | பொருள் மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் பௌதீக சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் 2023 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தினை விட ரூபா 179,645 குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் விற்பனையின் மூலம் உருவாகிய காசு மீதி காட்டப்பட்டிருந்தது. | சரியான வருமானத் தலைப்பிற்கு உள்ளடக்கப்படாமையால் இக்குறைபாடு ஏற்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நிதிக்கூற்றுக்களிலுள்ள கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றின் பிரகாரம் செலவுகளின் மூலம் கட்டுநிதியை தீர்த்துவைக்கும் மீதிக்கும் பரீட்சை மீதியிலுள்ள அந்த மீதிக்குமிடையே ரூபா 6,589,597 வித்தியாசம் காணப்பட்டது. | திறைசேரிக்கு அனுப்பிய கட்டுநிதி சரியாக விடுவிக்கப்படாமை, பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதியானது பிழையாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை மற்றும் தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதி காணப்பட்டமை இதற்கான காரணமாகும். | சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் மற்றும் முறையே 2023 சனவரி 27 மற்றும் 2023 பெப்ரவரி 02 ஆந் திகதிய 01/2023 மற்றும் 02/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணக்கமற்ற வகையில் 1101 ஆம் செலவு விடயத்தின் நிதி ஏற்பாட்டு சேமிப்பினை மிகைத்து ரூபா 1,924,022 பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்ட ரூபா 6,211,736 பொறுப்புக்கள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து பொறுப்புக்களும் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இடமாற்றம் பெற்றுச் சென்று, மரணமடைந்து 02 மாதங்களிலிருந்து 40 நாட்கள் வரை காலங்கடந்திருந்த வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்தும் இறுதித் தவணைப் பணம் அறவிட்டு 01 மாத்திலிருந்து 11 ஆண்டுகள் வரை எந்த தவணைப் | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

பணமும் அறவிடப்படாத ஓய்வுபெற்றுச் சென்று 01 மாத்திலிருந்து 07 மாதங்கள் வரை காலங்கடந்திருந்த முதலியவாறு 12 உத்தியோகதர்களிடமிருந்து ரூபா 1,331,290 கடன் மீதி அறவிட வேண்டிக் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 17 பிரதேச செயலகங்களின் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரையான காலத்தில் மாற்று வழியான காணிகளை வழங்குவதற்கு இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2494 ஆக இருந்த போதிலும் அவர்களில் 736 குடும்பங்களுக்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் காணி கிடைத்திருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட காணிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருக்காமை, நபர்கள் முன்னர் குடியிருந்த இடங்களிலிருந்து நீங்குவதற்கு உள்ள விருப்பமின்மை, காணிகளை தேடிக் கண்டு பிடிப்பதிலுள்ள சிக்கல்கள் முதலிய விடயங்கள் இதற்கு காரணமாக இருந்தன. | தற்பொழுது சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளை வழங்குவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வெள்ளம் மற்றும் மண் சரிவினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அழிவுக்குள்ளாகிய வீடுகளுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணம் ரூபா 338,402,363 ஆகும். 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 312,437,884 மீதியும் இந்த மீதியில் காணப்பட்டதுடன் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காமை இந்த தாமதத்திற்கு காரணமாக இருந்தது. | தேவையான நிதி ஏற்பாடும் கட்டு நிதியும் கிடைக்காமை | இந்த இழப்பீட்டினை துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கலவான பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 90 மில்லியன் தொகையான 356 அபிவிருத்திச் செயற்திட்டங்களை 2023 ஆம் | செயற்திட்ட அங்கீகாரம் தாமதித்து கிடைத்தமை, பொருத்தமான ஒப்பந்தக்காரர்கள் | ஆண்டிற்குள் உரிய செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான அனைத்து |

| | | |
|---|---|---|
| ஆண்டில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 3.2 மில்லியன் தொகையான 07 செயற்திட்டங்கள் மாத்திரம் வேலைகளைப் பூர்த்திசெய்திருந்தன. | இல்லாமை, நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல் முதலிய விடயங்கள் இதற்கு காரணமாக இருந்தது. | முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும். |

**3.2 போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| இடர்பாடுகளைக் குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் கால்வாய்களின் தடைகளை அகற்றும் 03 செயற்திட்டங்களை ஆரம்பிக்காமையின் காரணமாக ரூபா 550,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் மீள ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சமூக பங்களிப்பின் மூலம் செய்யக்கூடியதாகவிருந்த 04 கால்வாய்களைத் துப்பரவு செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,934,997 தொகை அரசாங்கத்தின் செலவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறான செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது மேற்கொள்ளப்படும் கிரயத்திற்கான பிரதிபலன்கள் காணப்பட்டிருந்தும் இடர்பாடுகளைக் குறைக்கும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதுவும் அவற்றின் பின்தொடர் நடவடிக்கைகள் சரியாக இடம்பெறுகின்றதா என்பதுவும் நிச்சமற்றதாகும். | அதிக அளவான மழைவீழ்ச்சி காணப்பட்டதனால் நிதி ஏற்பாட்டினை மீள ஒப்படைத்தலுக்கும் விவசாய அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்தி சமூக பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | தேவைப்பாட்டினை இனங்கண்டு முறைப்படியாக செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) 12 பிரதேச செயலகங்களிலுள்ள 107 அரசாங்க கட்டிடங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | உடைந்து காணப்படுவதும் மண்சரிவு ஏற்படும் ஆபத்துக்களும் இதற்கு காரணமாகும். | சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 06 பிரதேச செயலகங்களின் 10 வாகனங்கள் 03 ஆண்டுகளுக்கும் 06 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக பயன்படுத்தாது காணப்பட்டன. | மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | -மேற்படி- |
| (இ) | மாவட்ட செயலகத்தின் 38 அரசாங்க இல்லங்களில் 07 இல்லங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாது காணப்பட்டதனால் அந்த இல்லங்களில் காடு வளர்ந்து மூடிக்காணப்பட்டதுடன் கதவு யன்னல்களை கள்வர்கள் எடுத:துச் சென்றிருந்தனர். அந்த வீடுகள் போதைப் பொருட்கள் உள்ளடங்கலாக பல்வேறு தவறான நடத்தைகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் அனுமதியற்றவர்கள் குடியிருக்கும் ஆபத்தும் காணப்பட்டது. வீடுகளுக்காக காத்திருக்கும் பட்டியலில் இருக்கும் 77 உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் தாமதமும் இதனால் காணப்பட்டது. | நிதி ஏற்பாடு கிடைத்திருக்காததனால் இந்த வீடுகளை திருத்தம் செய்வதற்கு முடியாதுள்ளது. | -மேற்படி- |

**3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மரணமடைந்த ஓய்வூதியக்காரர்கள் தொடர்பாக தெரியப்படுத்துவதனை கிராம உத்தியோகத்தர்கள் தவறவிட்டதனால் 06 பிரதேச செயலகங்களில் மரணமடைந்த 34 ஓய்வூதியக்காரர்களுக்கு ரூபா 2,431,492 ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 13 பிரதேச செயலகப் பிரிவின் 131 ஓய்வூதியக்காரர்களுக்கு மிகையாகச் செலுத்திய ஓய்வூதியத்திலிருந்து 2023 திசெம்பர் 22 ஆந் திகதி ரூபா 16,763,098 தொகை இன்னும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | அறவிடப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (இ) | மாவட்ட செயலக கட்டிடங்களுக்கு கறையான்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு ரூபா 298,116 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் களஞ்சியத்தில் கறையான்கள் உருவாகி கோவைகள் மற்றும் ஆவணங்கள் அழிவடைந்திருந்தன. 2023 ஆம் ஆண்டளவில் 10 ஆண்டுகள் உத்தரவாத காலத்தில் 05 ஆண்டுகள் கடந்திருந்தும் அந்த உத்தரவாத காலத்திற்குள் ஒப்பந்தக்காரரின் மூலம் மீண்டும் பரிகாரங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இதற்காக ஒப்பந்தக்காரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | கட்டிடத்தின் பாதுகாப்பிற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| குருவிட நாலாந்த எல்லாவல கைத்தொழில் பேட்டையில் நீர்க்குழாயினை பதிக்கும் செயற்திட்டமானது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தேசிய போட்டி கேள்வி கோரலின் மூலம் ஒரு ஒப்பந்தக்காரரினைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக ரூபா 11.96 மில்லியனான ஒப்பந்தம் 04 பகுதிகளாகப் பகிரப்பட்டு சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குழாய்களை பரப்பி மீள நிரப்பும் போது காணப்பட்ட மண்ணை ஈடுபடுத்துவது தொடர்பாக ஆய்வு செய்வதற்குப் பதிலாக அதிக விலையான மண்ணைப் பயன்படுத்தி | தகமைபெற்ற சங்கங்களுக்கு செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்டது எனவும் மண் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் செலவு செய்தல்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

காண்களை நிரப்பியதனால் ஒப்பந்த பெறுமதியில் ரூபா 9.67 மில்லியன் அதாவது 87 சதவீதமாகன அதிக கிரயத்தினை இதற்காக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.6 விளைவற்ற செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 09 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 973 குடும்ப அலகுகளுக்கு 10522 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் ரூபா 1,489,500 தொகையான 3288 குஞ்சுகள் மரணமடைந்திருந்தமை, குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அரசாங்க கால்நடை வைத்தியரின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாமை, பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை, உணவு விலை அதிகரித்ததனால் ஏனைய உணவுகளை வழங்குவதன் மூலம் முட்டையிடாமை,பெறுகை பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்க 09 கோழிக் குஞ்சுகளுக்கு ஒரு சேவல் குஞ்சு என்ற வீதாசாரம் பின்பற்றப்பட்டிருக்காமை முதலிய காரணங்களின் அடிப்படையில் இச்செயற்திட்டம் வெற்றியளித்திருக்கவில்லை. | இயற்கை இடர், நோய், போன்ற நலன்பெறுனர்களால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களைப் போல நலன்பெறுனர்களுக்கு செயற்திட்டம் தொடர்பாக அனுபவம் இல்லாததன் அடிப்படையிலும் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செயற்திட்ட நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) 05 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 119 குடும்பங்களுக்கு ரூபா 691,324 தொகையான 598 கிலோகிராம் பாசிப்பயறு விதைகள் 19623 கிலோகிறாம் விளைச்சலினை எதிர்பார்த்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் 5695 கிலோ கிராம்களாகும். விதைகள் பொருத்தமின்மை,சூத்தையான | காலநிலை மாற்றம் மற்றும் உயிரினங்களின் ஆபத்துக்கள் இந்நிலைக்மைக்கு தாக்கமளித்துள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பயறுகள் அதிக அளவில் காணப்படல், விவசாயிகளையும் விளைச்சல் காணிகளையும் தெரிவுசெய்யும் போது தேவையான வரையறைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தாமை முதலியவற்றின் காரணமாக இச்செயற்திட்டம் வெற்றியளித்திருக்கவில்லை. | | |
| (இ) | பலாங்கொடை பிரதேசத்திலுள்ள 20 குடும்பங்களுக்கு ரூபா 799,200 செலவு செய்து 33300 கருவா நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தன. மாதிரியாக 8,100 நாற்றுக்களைப் பரீட்சித்த போது 2250 நாற்றுக்கள் அதாவது 28 சதவீதமானது மரணமடைந்திருந்தன. அப்பிரதேசத்தில் தீவிர நீர் தட்டுப்பாடு காணப்படுதலும், சுற்றாடல் ஆய்வினை மேற்கொள்ளாமையும் இதற்கு காரணமாக இருந்தது. | தீவிர வறட்சி நிலைமை காரணமாகும். | -மேற்படி- |
| (ஈ) | உயர்ந்த இறுதி வடிவமைப்பினைக் கொண்ட மரத்தினால் தயாரிக்கப்பட்ட மேடையானது கலாச்சார நிலையத்தின் அடிப்படைத் தேவைப்பாடாகும். எனினும் ஓப்பநாயக்க கலாச்சார நிலையத்தின் மேடையானது நியம தரத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது மேடை கட்டமைப்பின் மீது பலகைகள் பரந்து காணப்பட்டிருந்ததுடன் அவற்றில் பல பலகைகள் உக்கிப்போய் இருந்தன. இம்மேடையின் நிர்மாண வேலைகள் சரியானது என சான்றுபடுத்திய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசும் பிரச்சினைக்குரியதாகும். நடனங்களும் பல்வேறு நாடகங்களும் கலாச்சார நிலையத்தின் கலாச்சார நிலையத்தின் அடிப்படையில் முன்வைப்புக்களாகும். எனினும் அவ்வாறான அடிப்படைத் | நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்படாததனால் தேவையான நடவடிக்கைகள் செய்யப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்பாடு எதனையும் இக்கலாச்சார நிலையத்தின் மூலம் பூரணப்படுத்த முடியாதிருந்ததனால் நியம தரத்திலான ஒரு மேடையை நிர்மாணிக்கும் வரை இக்கட்டிடத்திற்காக செலவு செய்த ரூபா 4,110,568 பணமானது ஒரு விளைவற்ற செலவாகும். | | |
| (உ) | வேவல்கந்துர ஹோட்டன்வத்தையில் ஒரு கோயிலை நிர்மாணித்தல் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதன் நிர்மாண வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. தற்பொழுது அக்காணியும் காடு வளர்ந்து இருந்ததனால் செலவு செய்த ரூபா 290,899 தொகை ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. | நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரித்தலும் பொருள் தட்டுப்பாடும் இதற்கு காரணமாகும். | -மேற்படி- |
| (ஊ) | ரூபா 18.5 மில்லியன் செலவு செய்து 2022 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட CCTV கமரா முறைமையானது ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | ஏனைய துணைக் கருவிகளைப் பெற்று செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க காணிகளில் மணல், கருங்கற்கள், பெல்ஸ்பார், பளிங்குகற்கள், கெல்சயிட், டொலமயிட் ஆகிய கனியப் பொருட்களை அகழ்வதற்காக அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போது அக்கனியப் பொருட்களுக்குரிய அரசிறைக்கு மேலதிகமாக 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க மற்றும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க | அறவீடு செய்யும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படும். | உரிய வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தல்களுக்கு இணங்க கியூப் அளவின் அடிப்படையில் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு 04 பிரதேச செயலகங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ() | ரூபா 25,850,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 22 வீடுகளின் கட்டிட விண்ணப்ப பத்திரங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை குருவிட்ட பிரதேச செயலகத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாமையால் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையை முடிவுறுத்த முடியாதிருந்தது. | இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | தேவையான அங்கீகாரத்தினை துரிதமாக பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 06 பிரதேச செயலகங்களின் ரூபா 3,377,579 மீதியுடனான வங்கி கணக்கானது 06 மாதங்களிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தாது காணப்பட்டன. | எதிர்காலத்தில் கடனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி கணக்கினை செயற்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 11 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் அமைந்துள்ள 112 அரசாங்க காணிகளின் உரிமையினை பிரதேச செயலகம் பொறுப்பேற்றிருக்கவில்லை. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரிமையை பொறுப்பேற்றல் வேண்டும். |
| (உ) | ஓபநாயக்க பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டிலிருந்து ஒரு தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஒரு கணனி நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது. அந்த நிறுவனம் விலை மனுக்கோராமலும் பொருள் விபரக் குறிப்பினை கருத்தில் கொள்ளாதும் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். தற்பொழுது 19 மாதங்கள் காலம் இக்கணனி நிகழ்ச்சித்திட்டம் பயன்படுத்தப்பட்டிருந்தும் எந்த வகையிலும் ஒரு உடன்படிக்கை | எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் முறைப்படியாக இந்த முறைமையை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரம் மற்றும் உடன்படிக்கை செய்தல் இல்லாது செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கு மாவட்ட செயலகத்தின் அல்லது ஏனைய எந்தவொரு முறைமையிலும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**3.8 செயற்பாட்டு பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வறிய குடும்பங்களை வலுப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 21,302,688 தொகையான பொருட்கள் மற்றும் நாற்றுக்கள் 04 பிரதேச செயலாளர் பிரிவுகளின் 521 நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் மாதம் அளவில் இப்பொருட்களையும் நாற்றுக்களையும் பகிர்நதளித்தல் இடம்பெற்று 02 ஆண்டுகளை மிகைத்திருந்தும் பிரதேச செயலகங்களின் மூலம் எந்த பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வலுப்படுத்தப்பட்டுள்ள நலன்பெறுனர்களை இனங்காண்தல் அல்லது இனங்காண்பதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வலுப்படுத்துதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் இடம்பெற்று வருகின்றது. | அபிவிருத்தி செயற்திட்ட நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்ப்டுத்தப்பட்ட 36 சமூர்த்தி வங்கிகளினால் வழங்கிய கடன்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 09 மாதங்களுக்கு குறைந்த காலங்கடந்த கடன்கள் மற்றும் 09 மாதங்களுக்கு மேற்பட்ட அறவிட முடியாக் கடன்கள் முறையே ரூபா 357,478,987 | கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிட முடியாக் கடன்கள் மற்றும் காலங்கடந்த கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 208,148,406 ஆகும். | | |
| (இ) | எலபாத பிரதேசத்திலுள்ள 184 சமுர்த்தி நலனாளிகளுக்கு ரூபா 8,083,133 தொகையான பொருட்கள் மற்றும் நாற்று வகைகளைப் பகிர்ந்தளிக்கும் போது 2023 திசெம்பர் மாதத்திற்கு 02 ஆண்டுகள் அளவில் கடந்திருந்த போதிலும் அன்று வரை அந்த நலனாளிகள் வலுவூட்டப்பட்டுள்ளார்கள் என்பது இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வலுவூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டம் முறைப்படியாக கண்காணிக்கப்படுதல் வேண்டும். |

**3.9 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| எம்பிலிபிடிய பிரதேச செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அமாதஹர பொசன் வலயம் - 2023 இற்காக முறையற்ற வகையில் ஒரு நிதிக்குழு தோற்றுவிக்கப்பட்டு நிதிப்பிரமாணம் 170 (2) இற்கு முரணாக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாது பொது மக்களிடமிருந்து ரூபா 1,304,000 அறவிடப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 1,296,446 தொகை பெறுகை நடைமுறை இன்றியும் வவுச்சர்கள் தயாரிக்கப்படாமலும் செலவு செய்யப்பட்டிருந்தது. | பிரதேச செயலகத்தின் தலையீட்டில் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் தேவையான அனைத்து நிதிகளும் தனிப்பட்டவர்களின் அனுசரணையின் மூலம் இடம்பெற்றது எனவும் தெரிவிக்கிறேன். | உரிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 342 மிகை ஊழியர்களின் சேவைத் தேவைப்பாட்டினை இனங்கண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வினைத்திறனாக ஏனைய நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எந்தவொரு உத்தியோகத்தரையும் மிகையாக கருதி நடவடிக்கை எடுக்காதிருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதனால் இச்செயற்பாடானது மாவட்ட செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டுக் காணப்பட்டது. | உரிய பதவிகள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 08 பிரதேச செயலகங்களுக்கு இணைத்க்கொள்ளப்பட்டுள்ள பல்நோக்கு ஊழியர்களுக்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 175,676,491 செலுத்தப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக அவர்கள் ஈடுபடுத்தப்படாது அச்செயற்பாடுகள் வெளி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,688,762 செலுத்தப்பட்டிருந்தது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கேள்வி நடைமுறைகளுக்கு இணங்க பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. | செலவுகளை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |